கலை பண்பாட்டுத்துறை - ஜவகர் சிறுவர் மன்றம் சார்பாக

பள்ளி மாணவர்களுக்கான கலைப் போட்டிகள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.20- பள்ளி, மாணவ - மாணவியருக்கு அரசின் சார்பில் நடத்தப்படும் சென்னை மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் குறித்து அரசு செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக 5 முதல் 16 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு, கலைப்பயிற்சிகள் அளித்துவருகிறது. சிறார்களிடையே மறைந்து கிடக்கும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் குரலிசை, பரதநாட்டியம், ஓவியம் மற்றும் கிராமிய நடனம், ஆகிய நான்கு கலைப் பிரிவுகளிலும், 58, 912, 1316 வயதுப் பிரிவுகளிலும் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. 912, 1316 ஆகிய வயது பிரிவுகளில் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற சிறார்களுக்கு மாநில அளவிலான கலைப்போட்டிகள் நடத்தி, பரிசுத் தொகையும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

அவ்வகையில், முதற்கட்டமாக 58, 912, 1316 என்ற மூன்று வயது வகைப் பிரிவில் சென்னை மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் 24.08.2024 அன்று குரலிசை, பரதநாட்டியம், ஓவியம்மற்றும் கிராமிய நடனம் ஆகிய கலைப் போட்டிகள் நடைபெறவுள்ளது. கலைப்போட்டிகள் அனைத்தும் சென்னை28, இராஜா அண்ணாமலைபுரம் டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலையிலுள்ள, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் காலை 9.00 மணி முதல் முன்பதிவு நடைபெறவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ளும், மாணவ, மாணவிகளின் பெயர், வயது, பிறந்த தேதி, வீட்டு முகவரி, பள்ளியின் பெயர் ஆகிய விவரங்களுடன் (Birth Certificate) வயது சான்றிதழ் கொண்டு வரவேண்டும். பரதநாட்டியம், கிராமிய நடனம், குரலிசை ஆகிய கலை போட்டிகளின் 58, 912 வயது பிரிவு மாணவ, மாணவியருக்கு காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், 1316 வயது வகை மாணவ, மாணவியருக்கு பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணி வரையிலும், ஓவியப் போட்டிகள் காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரையிலும் நடைபெறும்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பங்கேற்புக்கான சான்றிதழும், மாவட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான விதிமுறைகள்

பரதநாட்டியம் (செவ்வியல்)

பரத நாட்டியம், குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற நடனங்கள் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும், திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கர்நாடக இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மேற்கத்திய நடனங்கள் மற்றும் குழு நடனங்களுக்கு அனுமதியில்லை. குறுந்தகடுகள் / பென் டிரைவ் ஆகியவற்றினை பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

கிராமிய நடனம்

(நாட்டுப்புறக் கலை)

தமிழகத்தின் மாண்பினை வெளிப்படுத்தும் கிராமிய நடனங்கள் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும் திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கிராமிய இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. குறுந்தகடுகள் / பென் டிரைவ் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

குரலிசை

கர்நாடக இசை பாடல்கள், தேசியப் பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் மட்டுமே பாட வேண்டும். மேற்கத்திய இசை, திரைப்பட பாடல்கள், பிற மொழி பாடல்கள், குழுப்பாடல்களுக்கு அனுமதியில்லை. குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை பாட அனுமதிக்கப்படும்.

ஓவியம்

40x30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். பென்சில், கிரையான், வண்ணங்கள், போஸ்டர் கலர், வாட்டர் கலர் , ஆயில் கலர் பெயிண்டிங் என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள், வண்ணங்கள் தூரிகைககள் உட்பட தங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். குழுவாக ஓவியங்கள் வரைய அனுமதியில்லை. ஒவ்வொரு வயது வகைக்கும் தனித் தனியாக தலைப்புகள் போட்டி தொடங்கும் போது அறிவிக்கப்படும்

வயது விவரம் (1.6.2024 அன்று உள்ளபடி 16 வயது)

அ. 5 முதல் 8 வயது பிரிவு -01.06.2016 முதல் 31.05.2019 வரை

ஆ. 9 முதல் 12 வயது பிரிவு 01.06.2012 முதல் 30.05.2015 வரை

இ. 13 முதல் 16 வயது பிரிவு -01.06.2008 முதல் 30.05.2011 வரை

மேலும், விவரங்களுக்கு 04428192152 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (19.8.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட நா. முருகானந்தம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இட ஒதுக்கீட்டினைப் பறித்து -

அரசியல் சாசனத்தின் மீது பிரதமர் மோடி தாக்குதல் நடத்துகிறார்!

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.20- பட்டியல் - பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினை மோடி அரசு பறிக்கிறது என்றும் இதன் மூலம் பிரதமர் மோடி அரசியல் சாசனத்தின் மீது தாக்குதல் நடத்துகிறார் என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

யு.பி.எஸ்.சி. சமீபத்தில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணை செயலாளர்கள் போன்ற பதவிகளுக்கு நேரடி ஆள் சேர்ப்பு மூலம் பணியமர்த்துவதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இது எஸ்சி, எஸ்டி மற்றும் ஒபிசி பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு உரிமைகளை குறைத்து மதிப்பிடுகின்றது என்று எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்திருந்தன. என்றாலும், சில பதவிகளுக்கு சிறப்பு ஞானம் தேவைப்படுகிறது என்று ஏஆர்சி அங்கீகரித்துள்ளது. அது அரசுப் பணியாளர்களிடம் இருப்பதில்லை, அப்படியான நேரத்தில் அந்த இடைவெளிகளை நிரப்ப தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுத் துறைகளில் இருந்து நிபுணர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைக்கிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:-

"அரசுப் பணியாளர்களை யுபிஎஸ்சி மூலம் தேர்வு செய்வதற்கு பதிலாக ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) வழியாக சேர்ப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடி அரசியல் சாசனத்தின் மீது தாக்குதல் நடத்துகிறார். ஒன்றிய அரசின் முக்கியமான பணிகளுக்கு லேட்ரல் என்ட்ரி மூலம் ஆட்களைச் சேர்ப்பது பட்டியல், பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான இடஒதுக்கீடு வெளிப்படையாக பறிக்கப்படுகிறது என்று அர்த்தம்" என்று தெரிவித்திருந்தார்.

அகிலேஷ் யாதவ்

இண்டியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் அகிலேஷ் யாதவ் இந்த நேரடி ஆள்சேர்ப்பு நாட்டுக்கு எதிரான மிகப் பெரிய சதி என்று கூறினார்.

தனது எக்ஸ் பதிவொன்றில் அகிலேஷ், "யுபிஎஸ்சியின் பின்வாசல் வழியாக தங்களின் சித்தாந்தக் கூட்டாளிகளை அரசு உயர் பதவிகளில் அமர்த்த பாஜக தீட்டுகின்ற சதிக்கு எதிராக நாடு தழுவிய அளவில் போராட்டம் தொடங்குவதற்கான நேரம் வந்துவிட்டது. இந்த நேரடி ஆள்சேர்ப்பு முறை இன்றைய அதிகாரிகளுக்கான வாசல்களை அடைக்கும் அதே நேரத்தில் இளைய அதிகாரிகள் நிகழ் காலம் மற்றும் எதிர் காலத்தில் உயர் பதவிகளுக்கு செல்லும் வாய்ப்பைத் தடுக்கிறது. சாமானிய மக்கள் உதவியாளர்களாகவும் குமாஸ்தாக்களாகவும் மட்டும் இருக்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

பாஜக அரசு இதனைத் திரும்ப பெறவில்லை என்றால், அக்டோபர் 2ம் தேதி ஒரு புதிய இயக்கத்தைத் தொடங்க எங்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்க இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். அரசு இயந்திரத்தை கார்ப்பரேட்கள் கைப்பற்றுவதை எங்களால் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது" என்று அகிலேஷ் தெரிவித்துள்ளார்.

கல்வி உரிமையின் மதிப்பை உணர்ந்தால், அதை நம்மிடம் இருந்து பறிக்க முடியாது!

சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற 'கலைஞர் 100' வினாடி - வினா போட்டியில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உரை!

சென்னை, ஆக. 20 -

திமுக மகளிர் அணி மற்றும் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி நேற்று (19/08/2024) சென்னை கொரட்டூரில் உள்ள மோகன் கார்டன் மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராகச் சென்னை கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கலந்துக்கொண்டார். திமுக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர்.யாழினி போட்டியைத் தொகுத்து வழங்கினார்.

வினாடி வினா போட்டி, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேலானவர்களுக்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, சென்னை மண்டலத்தில் வினாடி வினா போட்டிகள் நடைபெற்றது. தமிழ் மொழி, இலக்கியம், திராவிட வரலாறு, கலைஞர் ஆற்றிய பணிகள், திமுக அரசின் திட்டங்கள் குறித்து வினாடி வினா கேள்விகளுக்கு ஆர்வத்துடன் போட்டியாளர்கள் பதில் அளித்தனர்.

விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி பேசியதாவது: இந்த கலைஞர்100 வினாடி வினா நிகழ்ச்சி ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான் நாங்கள் நடத்துகிறோம். ஒரு கட்டுரைப் போட்டி என்றால் வீட்டில் பெற்றோர்கள் எழுதிக் கொடுத்து விட முடியும். அதே போல மற்ற போட்டிகளும், அந்த போட்டிக்கான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தால் போதும். ஆனால், வினாடி வினா போட்டி என்றால் என்ன கேள்வி கேட்பார்கள் என்று தெரியாது. அதற்காக நீங்கள் நிறைய விஷயங்களைப் படித்துக் கொண்டு வரவேண்டும், நிறைய

விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஏன் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், இன்றைக்கு எல்லோரும் பள்ளிக்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. கல்லூரியில் படிக்கக் கூடிய பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் நிறையத் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஆனால், இந்த நிலையை அடைவதற்கு என்னென்ன தியாகங்ககளை செய்திருக்கிறோம், நம் வரலாறு எப்படிப்பட்டது எனத் தெரிந்தால் தான், நாம் எதிர்காலத்தில் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

எப்படிக் கஷ்டப்பட்டு, எவ்வளவு விலை கொடுத்துப் படிக்கக் கூடிய உரிமையைப் பெற்று இருக்கிறோம் என்று நாம் புரிந்து கொண்டோம் என்றால், இந்த உரிமைகளை யாரும் நம்மிடம் இருந்து பறிக்க முடியாது என்று பேசினார்.

இந்நிகழ்வில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், திமுக மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளர் ராணி ரவிச்சந்திரன், திமுக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், திமுக மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன், சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், மாவட்ட மகளிர் அணி, மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த வினாடி வினா போட்டியை திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது X தளத்தின் வாயிலாகத் தொடங்கி வைத்தார். 'kalaingar100.co.in' என்ற இணையதளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று (கடந்த ஆண்டு) இணையவழி போட்டிகள் தொடங்கியது. முதல் சுற்று இணையவழி வினாடி வினா செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி அக்டோபர் 25, 2023 வரை நடைபெற்றது. 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி மற்றும் 18 வயதிற்குப்பட்டோருக்கான போட்டிகளாக இரு பிரிவுகளாக நடைபெறும்.

இரண்டாவது சுற்று மண்டல போட்டி 12 மாவட்டத்தில் நடைபெறுகிறது. தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தர்மபுரி, ராணிப்பேட்டை, ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி முடிவடைந்தது. மண்டலத்தின் வெற்றியாளர்கள் சென்னையில் நடைபெறவுள்ள அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.

முதலமைச்சர் கையால் பரிசு: இரு பிரிவுகளிலும் இறுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணிகளுக்கு தலா ரூ. 10 லட்சமும், 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சமும், 3ஆம் இடத்தைப் பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது. வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்குகிறார்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்

கோவூரில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் !

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்தனர்!

காஞ்சிபுரம், ஆக. 20 - காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவூரில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2023-2024)-ன் கீழ், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, புதிய பேருந்து வழித்தடங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவூரில் நேற்று (19.08.2024) குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2023-2024)-ன் கீழ், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, புதிய பேருந்து வழித்தடங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் (2023-2024)-ன் கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவூரில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, புதிய பேருந்து வழித்தடங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தொடர்ந்து இப்பேருந்து நிலையத்திலிருந்து வழித்தடம் எண்-1 கோவூர்-கிளாம்பாக்கம், வழித்தடம் எண்-2 கோவூர்-பிராட்வே, வழித்தடம் எண்-3 போரூர் - சோமங்கலம், வழித்தடம் எண்-4 போரூர் - நந்தம்பாக்கம், வழித்தடம் எண்-5 கிண்டி - பல்லாவரம் ஆகிய புதிய பேருந்து வழித்தடங்களை கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுடன் பேருந்தில் பயணம் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோர் குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து இப்பேருந்து நிலையத்திலிருந்து வழித்தடம் எண்-1 கோவூர்-கிளாம்பாக்கம், வழித்தடம் எண்-2 கோவூர்-பிராட்வே, வழித்தடம் எண்-3 போரூர் - சோமங்கலம், வழித்தடம் எண்-4 போரூர் - நந்தம்பாக்கம், வழித்தடம் எண்-5 கிண்டி - பல்லாவரம் ஆகிய புதிய பேருந்து வழித்தடங்களை கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுடன் பேருந்தில் பயணம் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. க.ஆர்த்தி, குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வே.அரி, குன்றத்தூர் ஒன்றிய குழு உறுப்பினர் தா.அன்பழகன், குன்றத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் பா.சுதாகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய சமுதாய கூடம் கட்டிடத்தினை சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று (19.08.2024) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் உள்ளனர்.

அண்ணா கிராம ஒன்றியம் -

கோழிப்பாக்கம் ஊராட்சியில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

வி.கே.வெங்கட்ராமன் தலைமையில், டாக்டர் விஷ்ணு பிரசாத் எம்.பி.துவக்கி வைத்தார்!

கடலூர், ஆக. 20 - கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதி அண்ணா கிராமம் ஒன்றியம் கோழிப்பாக்கம், பகண்டை, மாளிகைமேடு, கீழ் கவரப்பட்டு, மேல் கவரப்பட்டு, கொங்கராயனூர், பி.என். பாளையம் ஆகிய ஊராட்சி பகுதியில் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து ஊரகப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று ஆன்லைன் மூலம் உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் கோரிக்கை மனுக்கள் பெரும் முகாம் கோழிப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்தது.

முகாமிற்கு அண்ணா கிராம ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஆத்மா குழு தலைவர் வி. கே வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். பண்ருட்டி வட்டாட்சியர் ஆனந்த், அண்ணா கிராமம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், முருகன் முன்னிலை வகித்தனர்.

கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.கே.விஷ்ணு பிரசாத் ,அவர்கள் முகாமினை துவக்கி வைத்து நலத்திட்டங்களை வழங்கினார்.

இம் முகாமில் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மின்சாரத்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு இணையதள கணினி மூலம் பொதுமக்களின் மனுக்களை ஆன்லைனில் பதிவு செய்து தீர்வு காணப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் பட்டாம்பாக்கம் ஜெயமூர்த்தி, தொரப்பாடி சுந்தரவடிவேல், மாவட்ட பிரதிநிதி ராமச்சந்திரன், அவைத் தலைவர் முத்து சங்கர் , மாவட்ட பிரதிநிதிகள் ராமுராமச்சந்திரன் , புருஷோத்தமன் ,ராஜசேகர் ,துணை செயலாளர்கள் ராமர் ,உமையாள் ஆறுமுகம் , பொருளாளர் ஜி.கே. ஸ்ரீதர் , மாவட்ட அணி நிர்வாகிகள் கலியுல் ரகுமான், நரிமேடு செந்தில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.